# இணையவழி மாணவர் கருத்தரங்கம்

## தமிழிலக்கியங்களில் உடல்நலம் குறித்த பதிவுகள்

### அறிவிப்பும் அழைப்பும்

**10.08.2020 முதல் 14.08.2020 முடிய**
**(முற்பகல் 11.00 – 12.30 மணி)**


## தமிழாய்வுத்துறை

தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
St.Joseph's College (Autonomous)
பல்கலைக்கழக மானியக்குழுவின் தொன்மைத் தகுதியும், தேசியத் தரமதிப்பீட்டுக்குழுவின் (நான்காம் சுற்று) A++ தகுதியும் பெற்றது.

திருச்சிராப்பள்ளி – 2


**மாணவத்தோழர்களே, வணக்கம்.**

தென்னிந்தியாவில் தமிழகத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாநகரில் 'உண்மைக்கும் நன்மைக்கும்' என்னும் விருதுவாக்கோடு கல்வி வழி மனிதம் மலரச் செய்யும் இலக்குடன் 176 ஆண்டுகள் கல்விப்பணி ஆற்றி வருகிறது தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி. மதுரை மறைமாநில சேசு சபையினரால் நடத்தப்படுகின்ற இக்கல்லூரியே தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் (நான்காம் சுற்று) A++ தகுதியைப் பெற்ற முதல் கலை மற்றும் அறிவியல் கல்லூரியாகும். தமிழகத்தில் உள்ள கல்லூரிகளுள் பல்கலைக்கழக மானியக் குழுவின் சிறப்புத் தொன்மைத் தகுதியைப் பெற்றுள்ள ஒரே கல்லூரி இதுவேயாகும். இத்தகு பெருமைமிகு கல்லூரியில் நூல்களை வெளியிடுவதிலும் ஆய்வுக் கருத்தரங்குகளை நடத்துவதிலும் முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதிலும் சிறப்புறச் செயல்படுகின்ற தமிழாய்வுத்துறை ஆண்டு தோறும் காலத்திற்கேற்ற பயனுள்ள தலைப்புகளில் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. இத்தகைய ஆய்வுப்போக்கினை மாணவர்களிடையே வளர்த்தெடுக்கும் நோக்கில் **'தமிழிலக்கியங்களில் உடல்நலம் குறித்த பதிவுகள்'** என்னும் பொருண்மையில் இணைய வழி மாணவர் கருத்தரங்கை ஆகஸ்டு திங்கள் 10ஆம் நாள் முதல் 14ஆம் நாள் முடிய நடத்துவதற்குத் தமிழாய்வுத்துறை விழைகின்றது.

**கருத்தரங்கின் நோக்கம்**

கோவிட்-19 (கொரோனா) என்னும் தீநுண்மி தன் கொடிய ஆதிக்கத்தை உலகெங்கும் பரப்பி உலக நடைமுறைகளையும் மனித செயல்பாடுகளையும் முற்றிலும் முடக்கிப் போட்டுள்ளது. நோய்த்தொற்றின் வீச்சும், உயிரிழப்புத் துயரமும் மிகுந்துவரும் இந்நேரத்தில் மருந்தினைக் கண்டுபிடிக்கும் பெருமுயற்சியில் உலக நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. இந்தியச் சூழலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் வகையில் இம்மண்ணின் மருத்துவமுறையை வாழ்வியலில் பின்பற்ற மக்கள் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர். இத்தகு சூழலில் உடல்நலம் பற்றிய தமிழிலக்கியப் பதிவுகளையும் தொற்றுநோய் பற்றிய தமிழிலக்கியச் சித்திரிப்புகளையும் தமிழரின் மருத்துவக்கலைச் சிறப்புகளையும் குறித்து ஆராயும் வகையில் இக்கருத்தரங்கு நிகழ்த்தப்படுகிறது. பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டுள்ள இக்காலத்தில் ZOOM செயலியின் துணை கொண்டு நடத்தப்படுகின்ற இணையவழிக் கருத்தரங்காக இது அமைகிறது.

**ஆய்வுக்களங்கள்**

தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள், காப்பியங்கள், இலக்கண நூல்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், புதுக்கவிதை, புதினம், சிறுகதை, உரைநடை, நாடகம் உள்ளிட்ட புத்திலக்கியங்கள், ஊடகங்கள் ஆகிய ஆய்வுக் களங்களை அடியொற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கருத்தரங்கப் பொருண்மையை அடியொற்றியே கட்டுரைகள் அமைதல் வேண்டும்.

**ஆய்வுக்கட்டுரை வழங்கும் முறை**

இக்கருத்தரங்கில் பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகளின் தமிழ்த்துறையில் பயிலும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள், ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவர்கள், முதுகலை மாணவர்கள் மட்டும் கட்டுரையை அளிக்கவும் பங்கேற்கவும் அன்புடன் அழைக்கின்றோம். ஆய்வுக்கட்டுரை வழங்கவும் கருத்தரங்கில் பங்கேற்கவும் விரும்புபவர்கள் 22-07-2020க்குள் http://forms.gle/zTAGTFeG6PAyXcfe8 என்னும் இணையத்தொடர்பில் பதிவு செய்ய வேண்டும். தங்கள் ஆய்வுத் தலைப்பையும் ஒருபக்க அளவிலான ஆய்வுச்சுருக்கத்தையும் அதே பதிவுப்படிவத்தில் இணைத்திட வேண்டும். தரநிர்ணயக் குழுவால் தெரிவு செய்யப் பெற்றதாகத் தகவல் பெறும் கட்டுரையாளர்கள் 05-08-2020க்குள் தங்கள் கட்டுரையை tamilseminarsjc@gmail.com என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். இவர்கள் மட்டுமே இணையவழிக் கருத்தரங்கில் தங்கள் ஆய்வுக் கட்டுரையை வாசித்தளிப்பர்.

கட்டுரைகள் A4 தாளில் எட்டுப் பக்க அளவில் பாமினி (Bamini) அல்லது ஒருங்குறியீடு (Unicode) எழுத்துருவில் (Fonts) தட்டச்சு செய்து அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு கட்டுரையும் கலைச்சொற்கள் (Keywords), ஆய்வுச்சுருக்கம் (Abstract), முன்னுரை (Introduction) ஆகியவற்றைக் கொண்டு தொடங்கப் பெறுதல் வேண்டும். ஆய்வு நெறிமுறைக்கேற்பச் சான்றெண் விளக்கம் (Footnotes), துணைநூற்பட்டியல் (Bibliography) ஆகியன இடம் பெறுதல் வேண்டும்.

கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப் பெற்றுத் தமிழாய்வுத்துறையின் 'வளன்ஆயம்' ஆய்விதழில் பின்னர் வெளியிடப்பெறும்.

**பதிவுக்கட்டணம்**

கட்டுரை அளிப்பவருக்கு - ரூபாய் 100/-
பங்கேற்பாளருக்குக் கட்டணம் இல்லை.

### அழைப்பின் மகிழ்வில்

அருள்முனைவர் **ம.ஆரோக்கியசாமி சேவியர்** சே.ச.
முதல்வர், தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி

**அமைப்பாளர்:**
முனைவர் **ஞா.பெஸ்கி,** தமிழாய்வுத்துறைத்தலைவர்

**கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்:**
முனைவர் **பொன்.புஷ்பராஜ்**

**இணை அமைப்பாளர்:**
முனைவர் **சி.ஆரோக்கிய தனராஜ்**
ஒருங்கிணைப்பாளர்

### கருத்தரங்கக்குழு

முனைவர் ஆ.ஜோசப் சகாயராஜ்
முனைவர் செ.கென்னடி
முனைவர் டே.வில்சன்
முனைவர் ஜா.பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்
முனைவர் ஆ.இராசாத்தி
முனைவர் சி.ஷகிலாபானு
முனைவர் ஆ.மரிய தனபால்
திருமிகு. சி.பாக்கிய செல்வரதி
முனைவர் ரெ.நல்லமுத்து
திருமிகு. த.அருள்பிரகாசம்
திருமிகு தே.இன்பெண்ட் ஜெபர்சன் ஜீசஸ்
திருமிகு ஆ.அடைக்கலராஜ்
முனைவர் சு.சீனிவாசன்
முனைவர் ம.தனலெட்சுமி
முனைவர் இரா.முரளி கிருட்டினன்.
முனைவர் அ.அன்னையப்பன்


தொடர்புக்கு : முனைவர் ஆ. ஜோசப் சகாயராஜ்
(80728 - 47968)
தொழில்நுட்ப உதவி : முனைவர் இரா.முரளி கிருட்டினன்
(86105 – 37645)